# செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண்.08/2022 நாள் : 26.03.2022

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கண்ணப்பர் திடல் – சால்ட்கொட்டாராம் – யானை கவுனி மேம்பாலம் பகுதியில் புதிய மேம்பாலம் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்படவுள்ளதால் சென்னைக் குடிநீர் வாரியத்தின் 700 மி.மீ விட்டமுள்ள குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாயை இட மாற்றம் செய்து இணைக்கும் பணிகளை 28.03.2022 அன்று காலை 10.30 மணி முதல் இரவு 10.30 மணி வரை மேற்கொள்ளப்படவுள்ளதால் பகுதி - 5, இராயபுரம் உள்ளடங்கிய பகுதிகள் மற்றும் பகுதி - 9 -ல் உள்ள திருவல்லிக்கேணியில் குடிநீர் விநியோகம் நிறுத்தம்**

**சென்னைக் குடிநீர் வாரியம் தகவல்**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கண்ணப்பர் திடல் – சால்ட்கொட்டாராம் – யானை கவுனி மேம்பாலம் பகுதியில் புதிய மேம்பாலம் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்படவுள்ளதால் சென்னைக் குடிநீர் வாரியத்தின் 700 மி.மீ விட்டமுள்ள குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாயினை இடமாற்றம் செய்து இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இப்பணிகள் 28.03.2022 அன்று காலை 10.30 மணி முதல் இரவு 10.30 மணி வரை நடைபெற உள்ளதால் பகுதி - 5, இராயபுரம் பகுதிக்குட்பட்ட வேப்பேரி, பெரியமேடு, பூங்கா நகர், சிந்தாதிரிப்பேட்டை, புதுப்பேட்டை, எழும்பூர், கேரிசன் பகுதி, உயர்நீதிமன்றம், வால்டாக்ஸ் ரோடு, பிராட்வே, கொண்டிதோப்பு, சௌகார்ப்பேட்டை, ஏழுகிணறு, ஜார்ஜ்டவுன் மற்றும் பகுதி - 9 -ல் உள்ள திருவல்லிக்கேணி ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

இதனால், பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், அவசர தேவைகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக்கொள்ள கீழ்க்காணும் அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

பகுதிப் பொறியாளர் - 5 (இராயபுரம்) - கைபேசி எண்.8144930905
பகுதிப் பொறியாளர் - 9 (தேனாம்பேட்டை) - கைபேசி எண்.8144930909

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைக் குடிநீர் வாரியம்